திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவரவர்களே, இந்த உடன்பாட்டுக்குப் பிறகும் அந்த உரிமையைக் கொண்டாடுவதற்கு ஒரு அரிசன் டீ கடையிலே டீ கேட்டபோது அடிக்கப்பட்டார். அதுபற்றிய கேஸ்ஸை ரிஜிஸ்தர் செய்தார் அங்கேயிருக்கிற ஆய்வாளர். ஆனால், யாரையும் கைது செய்யவில்லை. என்னமோ, அரிசனங்களிடத்திலே கையெழுத்து வாங்கினார்கள். கடைசியிலே கேஸ் ரெஃபர்ட் என்று தந்திருக்கிறார்கள்.

இரண்டாவது சம்பவத்தில், அதிகாரி இம்மாதிரி செய்தது அமைச்சருக்குத் தெரியுமா? தெரியவில்லையென்றால், விசாரித்து அவர்பேரில் சீரியஸ்ஸான நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, வழக்குப் பதிவு செய்ததாகத்தான் இங்கே விவரம் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேறு தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தேனீத் தொகுதியில் பெரும்பாலான கிராமங்களில், 'பெரிடோனியா' நோயால் பருத்திப் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து.

(முற்பகல் 10–40)

திரு. வி. ஆர். ஜெயராமன்: தலைவர் அவர்களே, தேனீத் தொகுதியில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் பருத்திச் செடிகளில் பெரிடோனியா என்ற வெட்டுப்புழு விழுந்து பருத்தி மகசூல் பெரிதும் பாதிக்கப்பெற்று, விவசாயிகள் பீதி அடைந்து அவர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை திரும்பச் செலுத்த முடியாத நிலை இருப்பதால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எம்.சி.யூ.—5, வரலட்சுமி ஆகிய பருத்தி வகைகள் பெரியகுளம் காட்டத்தில் சுமார் 21,000 ஏக்கர் பரப்பில் பயிராகியுள்ளன.

தேனீத் தொகுதியில் பெரும்பாலான கிராமங்களில் 'பெரிடோனியா' நோயால் பருத்திப் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து

[திரு. ப. குழந்தைவேலு] [1978 மார்ச் 4

தேனி, போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியங்களடங்கிய 22 கிராமங்களில் சுமார் 2,500 ஏக்கர் பரப்பில் உள்ள பருத்திப் பயிர், இலைகளை உண்ணும் கம்பளிப் புழுக்களால் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட இப்பயிர்கள் 4 மாதம் முதல் 7 மாதம் வரை வளர்ச்சி அடைந்தவை. இந்தப் புழு பயிர்களில் காணப்பட்டவுடன், வேளாண்மையைத் துறையைச் சேர்ந்த பயிர் பாதுகாப்புப் பிரிவின் அலுவலர்கள் திரட்டப்பட்டு, அவர்கள் தீவிர பூச்சி மருந்து தெளிப்பு வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு வசதியாக மதுரைப் பகுதி வேளாண்மைத் துறை, துணை இயக்குநரின்கீழ் உள்ள களப் பணியாளர்கள் எல்லாம் பூச்சி மருந்து தெளிப்பு வேலையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். எந்த விவசாயிகளின் பயிர்கள் பாதிக்கப்பட்டனவோ அவர்களுக்கு கடனுதவியாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 250 வரை தர தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மதுரை மாவட்ட ஆட்சியரை வேளாண்மைத்துறை கேட்டுக் கொண்டிருக்கிறது.

க்ளோர்பைரிபாஸ் டர்ஸ்பான் என்ற மருந்து இந்தப் புழுக்களை அழிப்பதில் வல்லதாக உள்ளது. இதில் சுமார் 212 லிட்டர் மருந்தும் மற்ற பூச்சிக்கொல்லிகளும் இந்தப் பகுதியில் வினியோகிக்கப்பட்டுள்ளன. பூச்சிக்கொல்லிகளும் மருந்துகளின் பேரில் சமீபத்தில் அளிக்கப்பட்ட 25 சதவித தள்ளுபடி தொகை 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதி வரையில் விவசாயிகளுக்கும் மாநில முழுவதிலும் கிடைக்கும். தேவைக்கேற்ப விவசாயிகள் இவற்றை வாங்கி உபயோகித்துப் பயனடையலாம்.

பாதிக்கப்பட்ட 2,500 ஏக்கரில், சுமார் 1,000 ஏக்கரில் உள்ள பயிர் நல்ல வளர்ச்சியடைந்திருப்பதால் மகசூலில் சேதம் அதிகமாக இராது எனத் தெரிகிறது. சமீபத்தில் அந்தப்பகுதியில் பெய்த மழையின் காரணமாகவும், அந்த பெரிடோனியா நோய் மறைந்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

மேலும், புயல், வெள்ளம், வறட்சி முதலிய இயற்கைச் சீற்றங்களின் காரணங்களால் மகசூல் 37 பைசாவுக்கும் குறைவானதென மதிப்பிடப்படுமாயின் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெற்ற குறுகிய காலக் கடன்கள் நடுத்தரக் கால கடன்களாக மாற்றப்படும். தேனிப்பகுதியில் உள்ள பருத்தி மகசூல் வருவாய்துறையின் அலுவலர்களால் மதிப்பிடப்பட்டு அந்த மதிப்பீட்டின் அடிப்படையில்,

கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெற்ற பயிர்க் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை ஒத்திப்போடும் இச்சலுகையைப் பெற தேனிப்பகுதி விவசாயிகள் தகுதியுடையவராவார்கள்.

மேலும் அரசு தக்க முறையிலே நடவடிக்கை எடுத்து இந்த நோயைத் தீர்ப்பதற்கு உண்டான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்,

5. 1978—79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். தொடர்ச்சி.

கோரிக்கை எண்: 17—கல்வி. தொடர்ச்சி.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு சட்டப் பேரவைத்துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் 1978—79 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூற நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி மத்தியப் பட்டியலில் இருந்து, மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கல்வியை மாநிலப் பட்டியலில் இருந்து மத்தியப் பட்டியலுக்கு அம்மையார் இந்திரா அவர்கள் 42-வது அரசியல் சட்டத்தின் மூலம் கொண்டு சென்றார்கள். அந்த நாட்களிலே கூட மிசா சட்டம் மிரட்டியபோதும், பாது காப்புச் சட்டம் பயமுறுத்தியபோதும் நாங்கள் வன்மையாக எதிர்ப்புத் தெரிவித்தோம். ஆக, கல்வி, மாநிலப் பட்டியலில்தான் இருக்கவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டை ஆண்டபோது கல்வி மாநிலப் பட்டியலில் தான் இருந்தது. ஆகவே, மாநில சுயாட்சி கோரும் எங்கள் கொள்கை, கல்வி மாநிலப் பட்டியலில் இருக்க வேண்டும் என்பதுதான். எங்களுடைய கொள்கையும், இங்கே ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் கொள்கையும்